RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 279 | அக்டோபர் 12, 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# முதல்-அமைச்சர் விஜய்-ராகுல் காந்தி சந்திப்பு நிறைவு - இருவரும் ஒரே காரில் பயணம்





சென்னை, அக்.11-

இந்திய கல்வி முறையில் நடைபெறும் முறைகேடுகள், நீட் உள்ளிட்ட தேர்வுத்தாள் கசிவுகள், கல்விக் கட்டண உயர்வு மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களை திரட்டி நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி 'மாணவர்களின் குரல்' என்ற நிகழ்ச்சி வாயிலாக மாணவர்களிடம் பேசி வருகிறார்.

அதன்படி, ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில் தொடங்கி, மராட்டிய மாநிலம் புனே மற்றும் நாசிக் நகரங்கள், மத்திய பிரதேசம் மாநிலம் இந்தூர் போன்ற இடங்களில் மாணவர்கள் குரல்' நிகழ்ச்சி நடத்திய ராகுல் காந்தி, சென்னையில் உள்ள தீவுத் திடலில் மாணவர்கள் முன்னிலையில் பேச இருக்கிறார்.

முதல்-அமைச்சருடன் சந்திப்பு

மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நேற்று மதியம் 12.30 மணிக்கு சென்னை விமான நிலையத்திற்கு ராகுல் காந்தி வருகை தந்தார். அவருக்கு காங்கிரஸ் கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். சென்னை விமான நிலையத்தில் இருந்து நீலாங்கரையில் உள்ள முதல்-அமைச்சர் விஜய் வீட்டிற்கு ராகுல் காந்தி சென்றார்.

அங்கு ராகுல் காந்திக்கு விஜய் மதிய உணவு விருந்து அளித்தார். பின்னர் இரு தலைவர்களும் முக்கிய ஆலோசனை நடத்தினர். கட்சி நிர்வாகிகள் இன்றி தனியாக ராகுல் காந்தி ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின் போது, தற்போதைய அரசியல் சூழல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே காரில் பயணம்

சுமார் ஒரு மணி நேரம் இருவரும் ஆலோசனை நடத்தினர். அதன் பின்னர் ராகுல் காந்தியும், முதல்-அமைச்சர் விஜய்யும் நீலாங்கரையில் இல்லத்தில் இருந்து புறப்பட்டு ஒரே காரில் பயணம் செய்தனர். தொடர்ந்து பாலவாக்கத்தில் உள்ள கிரிக்கெட் வீரர் தோனிக்கு சொந்தமான ஒரு உணவகத்திற்கு சென்று தேநீர் அருந்தினர். தமிழக முதல்-அமைச்சர் மற்றும் மக்களவை எதிர்க்கட்சி தலைவரின் சந்திப்பையொட்டி சென்னையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடி வருகையை முன்னிட்டு சென்னையில் 15,000 போலீஸார் குவிப்பு



சென்னை, அக்.11-

பிரதமர் நரேந்திர மோடி இன்று (அக்.11) சென்னை வருகிறார்.

சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டப் பணிகளின் ஒரு பகுதியாக நிறைவடைந்துள்ள பூந்தமல்லி- வடபழனி வரையிலான 14.64 கி.மீ. தொலைவிலான சேவையைத் தொடங்கி வைக்கிறார். பின்னர் முதல்வர் விஜய்யுடன் பூந்தமல்லியில் இருந்து போரூர் வரை மெட்ரோ ரயிலில் இணைந்து பயணம் செய்கிறார்.

மேலும் ஐஐடி-யில் இயங்கி வரும் 10-க்கும் மேற்பட்ட முன்னணி ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் நிறுவனர்களை சந்தித்து கலந்துரையாடுகிறார். பின்னர் 'இசைஞானி இளையராஜா இசை கற்றல் மற்றும் ஆராய்ச்சி மையத்தை' பிரதமர் திறந்து வைக்கிறார். பல்வேறு தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்து, புதிய திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

'அம்ரித் பாரத்' திட்டத்தின்கீழ், தெற்கு ரயில்வேயில், மேம்படுத்தப்பட்ட பழநி, பரமக்குடி, நாமக்கல், அம்பா சமுத்திரம், வேலூர் கன்டோன்மென்ட் ரயில் நிலையங்கள், கோவை பகுதியில் 3 ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் காரைக்கால் - பேரளம் இடையே 23 கி.மீ. புதிய ரயில் பாதை என ரூ.700 கோடி மதிப்பிலான திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார். அது மட்டுமல்லாமல் விமான நிலையத்தில் இருந்து பரங்கிமலை ராணுவ மைதானம் வரை, சைதாப்பேட்டை நீதிமன்றம் அருகில் இருந்து அண்ணா பல்கலை. வரை 'ரோடு ஷோ' செல்கிறார்.

பிரதமரின் சென்னை வருகையை ஒட்டி 15 ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ளனர். மேலும் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாது காப்பு காரணங்களுக்காக 11-ம் தேதி மீனம்பாக்கம், கிண்டி, கோட்டூர்புரம், போரூர், நந்தம்பாக்கம் ஆகிய பகுதிகள் மற்றும் பிரதமர் பயணிக்கும் வழித்தடங்கள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அதோடு இந்த பகுதிகளில் ட்ரோன் கேமராக்கள் மற்றும் ஆளி ல்லா வான்வழிக் கருவிகள் பறக்கவிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. பிரதமர் செல்லும் அனைத்து பகுதிகளும் போலீஸாரின் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதுமட்டும் அல்லாமல் லாட்ஜ்கள், தங்கும் விடுதிகள், ஓட்டல்களில் தங்கியுள்ளவர்கள் குறித்தும், முக்கிய சாலைகளில் தீவிர வாகன சோதனையிலும் போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

# அனுமதியின்றி செயல்படும் குவாரி மீது நடவடிக்கை: அமைச்சர் பிரபு தகவல்



பரமக்குடி, அக்.11-

தமிழகத்தில் அனுமதியில்லாமல் செயல்படும் மணல், கல் குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என கனிமவளத் துறை அமைச்சர் பிரபு தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள இமானுவேல் சேகரனாரின் மணிமண்டபத்தில் அவரது 102-வது பிறந்த நாள் விழா அரசு சார்பில் நேற்று நடை பெற்றது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மதன்ராஜா, கனிம வளத் துறை அமைச்சர் பிரபு ஆகியோர் இமானுவேல் சேகரனாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் பல்வேறு துறைகளின் சார்பில் 76 பேருக்கு ரூ.78.95 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் பிரபு கூறும்போது, "தமிழகத்தில் அனுமதி இல்லாமல் செயல்படும் கல் மற்றும் மணல் குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனுமதி பெற்ற குவாரிகளில் இருந்து கல், மணல் எடுத்துச் செல்லும் லாரிகளில் ஜிபிஎஸ் கருவி கட்டாயமாக பொருத்தப்பட வேண்டும் என்ற நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது" என்றார்.

# திருப்பரங்குன்றம் மலையில் கதம்ப சாதம் சமைக்க அனுமதி: உயர் நீதிமன்றத்தில் தெரிவித்த மத்திய தொல்லியல் துறை



மதுரை, அக்.11-

திருப்பரங்குன்றத்தில் 'மலை மேல் குமாரர்' திருவிழாவுக்காக மலையில் சமையல் செய்ய விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்படுவதாக உயர் நீதிமன்றத்தில் மத்திய தொல்லியல் துறை தெரிவித்தது.

இதுதொடர்பாக திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த பிரபு மற்றும் தேனி பழனிசெட்டிபட்டியைச் சேர்ந்த பாண்டியராஜன் ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுக்களில் கூறியிருந்ததாவது: திருப்பரங்குன்றம் மலைகிராம மக்கள் காலங்காலமாக நடத்தி வரும் 'மலை மேல் குமாரர்' திருவிழாவில் 105 கிலோ அரிசி சமைத்து பக்தர்களுக்கு 'கதம்ப சாதம்' வழங்கப்படுவது வழக்கம்.

சமையலுக்குத் தேவையான அரிசி, சமையல் பொருட்கள் மலையில் உள்ள காசி விஸ்வநாதர் கோயிலுக்கு கொண்டு செல்லப்பட்டன. நேற்று முன்தினம் அதிகாலை 2 மணி அளவில் சமையல் வேலை தொடங்கும்போது மலைப்பகுதியில் சமைக்க அனுமதி இல்லை என கூறி 'கதம்ப சாதம்' சமைக்க அனுமதி மறுக்கப்படுவதாக கோயில் இணை ஆணையர் தெரிவித்தார்.

கதம்ப சாதம் தயாரிப்பது என்பது காலங்காலமாக நடத்தப்படும் ஒரு சடங்கு. எனவே, மலையின் மேல் சமைக்க அனுமதி மறுத்து மத்திய தொல்லியல் துறை பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து பிரசாதம் சமைக்க அனுமதி வழங்க வேண்டும். இவ்வாறு மனுக்களில் கூறப்பட்டிருந்தது. இந்த மனுக்கள் நீதிபதிகள் வேல்முருகன், ராமகிருஷ்ணன் அமர்வில் நேற்று அவசர மனுவாக விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அப்போது நீதிபதிகள், "வழிபாட்டு உரிமைகளில் தலையிடக்கூடாது என உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. அப்படியிருக்கும்போது மலையில் பிரசாதம் சமைத்து பக்தர்களுக்கு விநியோகம் செய்வதில் என்ன பிரச்சினை? ஒவ்வொரு ஆண்டும் மலையில் சமைத்துதான் பிரசாதம் வழங்கப்படுமா?" என கேட்டனர். அதற்கு மனுதாரர் தரப்பில், காலங்காலமாக மலையின் மேல் சமையல் செய்தே பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது என கூறப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், மலை உச்சியில் சமையல் செய்வது குறித்து தற்போதைக்கு முடிவெடுக்க முடியாது. அடிவாரத்தில் சமைத்த உணவை மலைக்குக் கொண்டு சென்று பக்தர்களுக்கு வழங்கலாம். தேவையற்ற சம்பவங்களைத் தடுக்க காவல் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

இந்த உத்தரவு பிறப்பித்த சில மணி நேரத்தில், மலை மேல் குமாரர் திருவிழாவில் மலையில் சமையல் செய்யக் கூடாது என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டுள்ளதாக மத்திய தொல்லியல் துறை சார்பில் நீதிபதிகளிடம் தெரிவிக்கப்பட்டது. இதையேற்று அடிவாரத்தில் சமையல் செய்து மலையில் பக்தர்களுக்கு விநியோகம் செய்யும் முந்தைய உத்தரவை திரும்பப் பெறுவதாகவும், மனுக்களை முடித்து வைப்பதாகவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# "2047-க்குள் வளர்ந்த இந்தியா இலக்கை அடைய தொலைதூர கிராமங்களிலும் தரமான மருத்துவ வசதி அவசியம்" - ஆளுநர் வலியுறுத்தல்




காட்டாங்கொளத்தூர், அக்.11-

தொலைதூர கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களுக்கும் தரமான மருத்துவ வசதிகள் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும், மருத்துவ ஆராய்ச்சிகள் அடித்தட்டு மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் அமைய வேண்டும் என்று ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வலியுறுத்தினார்.

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் எஸ்ஆர்எம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், தேசிய மருத்துவ அறிவியல் கழகத்தின் 66-வது ஆண்டு மாநாடு மற்றும் பட்டமளிப்பு விழாவான 'நாம்ஸ்கான் 2026' மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாட்டைத் தொடங்கிவைத்து தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பேசியதாவது: மருத்துவத் துறையின் ஆராய்ச்சிகளும், ஆய்வக ஆய்வுகளும் சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்குப் பயனளிக்க வேண்டும். ஆண்டுக்கு ஒரு முறை மருத்துவ முகாம்களை நடத்தி மருந்துகளை வழங்குவதுடன் நின்றுவிடாமல், கிராமங்களுக்கே சென்று தொடர்ச்சியான மருத்துவ வசதிகளை ஏற்படுத்த வேண்டும். மருத்துவத் தொழில்நுட்பங்கள் மூலம் தொலைதூரப் பகுதிகளுக்கும் சிகிச்சை வசதிகளைக் கொண்டு சேர்க்க வேண்டும். மருந்துகளைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கான வழிகளையும் கண்டறிய வேண்டும்.

நாட்டின் தொலைதூரக் கிராமங்களில், மருத்துவ வசதிகள் கிடைக்காத பகுதி மக்களைச் சென்றடைவதே அனைத்து ஆராய்ச்சிகள் மற்றும் திட்டங்களின் முதன்மை நோக்கமாக இருக்க வேண்டும். தேசிய வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியை மட்டும் குறிக்காது. கல்வி, கலை, கலாச்சாரம், ஆன்மிகம், மருத்துவம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் முழுமையான வளர்ச்சி அவசியம். மக்களின் பங்கேற்பு இன்றி சமூக, தேசிய வளர்ச்சியை அடைய முடியாது. 2047-க்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கு, கடைக்கோடி கிராம மக்களின் மருத்துவத் தேவைகளையும் கருத்தில் கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இவ்வாறு ஆளுநர் பேசினார்.

பல்துறை அணுகுமுறை: மாநாட்டுக்குத் தலைமை வகித்த எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் நிறுவனர் வேந்தர் டி.ஆர்.பாரிவேந்தர் பேசுகையில், "அறிவியல், தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைவு மூலம் ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பல்துறை அணுகுமுறையை வலுப்படுத்த எஸ்ஆர்எம் கல்வி நிறுவனம் சிறந்த தளமாகும். பல்வேறு துறைகளின் அறிவையும் திறன்களையும் ஒருங்கிணைக்கும் பல்துறைப் பல்கலைக் கழகமாக விளங்குவதால், மருத்துவக் கல்வி மற்றும் நோயாளர் பராமரிப்பில் ஒருங்கிணைந்த அணுகு முறையை மேம்படுத்துவதற்கு ஏற்ற சூழல் உள்ளது" என்றார்.

அக்.8 முதல் 11-ம் தேதி வரை நடைபெறும் மாநாட்டில் 1,400-க்கும் மேற்பட்ட மருத்துவ வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், சுகாதாரத் துறை நிபுணர்கள் பங்கேற்கின்றனர். மருத்துவ ஆராய்ச்சியை ஊக்குவித்தல், நவீன தொழில்நுட்பங்களைச் சிகிச்சையில் பயன்படுத்துதல், மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், கூட்டு ஆராய்ச்சியை வலுப்படுத்துதல் ஆகியவை மாநாட்டின் நோக்கங்களாகும்.

நுண்ணுயிர் எதிர்ப்பு, CAR-T உயிரணுச் சிகிச்சை, அரிய மரபணுக் கோளாறுகள், நீரிழிவு நோய் ஆராய்ச்சி, பெருந்தொற்றுத் தடுப்பு, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை உள்ளிட்ட சமகால மருத்துவத் தலைப்புகளில் அமர்வுகள் நடைபெறுகின்றன. மருத்துவ ஆராய்ச்சியின் முன்னேற்றங்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தரமான சிகிச்சை கிடைக்க உதவ வேண்டும் என்பதே மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

தொடக்க விழாவில் தேசிய மருத்துவ அறிவியல் கழகத் தலைவர் டாக்டர் திகம்பர் பெஹேரா, இந்திய தேசிய அறிவியல் கழகத் தலைவர் டாக்டர் சேகர் சி. மாண்டே, தேசிய மருத்துவ ஆணையத் தலைவர் டாக்டர் அபிஜாத் சேத், எஸ்ஆர்எம் கல்விப் பிரிவு இணை வேந்தர் டாக்டர் பி.சத்திய நாராயணன், மாநாட்டு ஒருங்கிணைப்புத் தலைவர் டாக்டர் ஆர்.ஜெயந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நிதி அயோக்- தேசிய நகர்புற விவகாரங்கள் நிறுவனம் சார்பாக சிறிய நகரங்களுக்கான முன்னெடுப்பு, ஒசூர் மண்டலப் பொருளாதார மற்றும் இடஞ்சார்ந்த மேம்பாடு குறித்த கையேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் வெளியிட்டார்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் உத்தரவின்படி, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், தியாகரசனப்பள்ளி ஊராட்சி, சிகரலப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த இராதாகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான நிலத்தில் உரம் தயாரிப்பதற்காக வெளிமாநிலத்திலிருந்து கழிவுகள் கொண்டு வந்த சரக்குந்து வாகனத்தை அரசு விதிமுறைகளுக்குட்பட்டு 08.10.2026 அன்று கைப்பற்றப்பட்டது.



## சுமைதாங்கியில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பிறந்தநாள் விழா

ராணிப்பேட்டை அக்.11-

ராணிப்பேட்டை மேற்கு மாவட்டம் வாலாஜா கிழக்கு ஒன்றியம் சுமைதாங்கி கிளை பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் பாமக கட்சியின் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்களின் பிறந்தநாள் விழா வெகு விமர்சையாக கொண்டாடினர். இந்த நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் வாலாஜா கிழக்கு ஒன்றியம் சுமைதாங்கி ஞானசேகர் தலைமை தாங்கினார். பொருளாளர் தண்டபாணி, ஒன்றிய தலைவர் ராமு, கிளைச் செயலாளர் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளராக மேற்கு மாவட்ட செயலாளர் கே. எல். இளவழகன் கலந்து கொண்டு கேக் வெட்டி அன்னதானத்தை துவக்கி வைத்து சிறப்பித்தார். இதில் தலைவர் ராஜசேகர், இளைஞரணி செயலாளர் குரு ஜெயராஜ், வார்டு கவுன்சிலர்கள் மூர்த்தி, பிரபு மற்றும் அருண்குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சமூகநலன் மகளிர் உரிமைத்துறை சார்பில் திருநங்கைகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி அக்.11-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சமூகநலன் மகளிர் உரிமைத்துறை சார்பில் திருநங்கை களுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) ப.ராஜகுமார் தலைமையில் நடைபெற்றது. திருநங்கைகளின் குறைகளை நேரடியாகக் கேட்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வதுடன், அவர்க ளின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் இக்குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது. அதன்படி, இன்றையதினம் நடைபெற்ற கூட்டத்தில், புதிய அடையாள அட்டை, அடையாள அட்டை பெயர் திருத்தம், குடும்ப அட்டை, நலவாரிய அட்டை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை அடங்கிய 12 மனுக்களை பெற்று கொண்ட மாவட்ட வருவாய் அலுவலர் பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், திருநங்கைகளின் நலனுக்காக அரசால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் அவர்களைச் சென்றடைவதை உறுதி செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். இக்கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர். கவிதா, மாவட்ட சமூக நல அலுவலர் விஷ்ணுபிரியா, உதவி இயக்குநர் (மாவட்ட தொழில் மையம்) .முகமது மசூத், முன்னோடி வங்கி மேலாளர். நேதாஜி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## குரோம்பேட்டை பாரதிபுரத்தில் இந்து சேனா தேசிய பேரியக்கம் மற்றும் மக்களுக்கான மக்கள் இயக்கம் சார்பில் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் குறித்து கோரிக்கை விளக்க தெருமுனை கூட்டம் நடைபெற்றது

குரோம்பேட்டை அக் 11

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை பாரதிபுரத்தில் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில் வெளிபடை தன்மையற்ற நிர்வாகம், ஊழல் மற்றும் முறைகேடு குறித்து கோரிக்கை விளக்க தெருமுனை கூட்டம் இந்து சேனா தேசிய பேரியக்க துணைச் செயலாளர் ஜெயா பக்தவச்சலம் தலைமையில், லயன் எம் வரதன் வரவேற்பில், மக்களுக்கான மக்கள் இயக்கம் பொதுசெயலாளர் டாக்டர் தி கார்த்திக் கண்ணன் கண்டன உரையாற்றினார், தாம்பரம் மாநகர நல சங்கங்களின் கூட்டமைப்பு இணைச் செயலாளர் காந்தி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார், தலைவர் தஞ்சை இளஞ்சிங்கம் எழுச்சி உரையாற்றினார் முகுந்தராவ் அறநிலையத்துறை நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கினார். கூட்டத்தில் மக்களுக்கான மக்கள் இயக்கம் பொதுசெயலாளர் கார்த்திக் கண்ணன் பேசுகையில் திருப்பணி நடைபெறும் போது ஓப்பந்தம் கோர வேண்டும், ஒரு பொறியாளர் உட்பட யாரும் இல்லாமல் திருப்பணிகள் நடைபெறுகிறது எனவும் பொதுமக்களிடம் வாங்கும் டொனேஷன் அதற்க்கான ரசீது இல்லை எனவும் இதற்க்கான அனைத்து ஆதரம் உள்ளதாகவும், மக்களுக்கான. தூய ஆட்சி எங்கே போனது என கேள்வி எழுப்பினார் மேலும் பாரதிபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில் மிக பெரிய ஊழல் நடந்துள்ளது இதனை அறநிலையத்துறை விசாரனை மேற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்வேறு கருத்துக்களை கூறி கண்டன உரையாற்றினார். ஊழல் வெளிபடையான நிர்வாகம் வேண்டும், RTI முலமாக மக்களுக்கு தகவல்கள் வழங்கபட வேண்டும், புகார்கள் மீது துறை ரீதியான விசாரனை மற்றும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், தனிநபர் ஆதீக்கத்தில் கோயில் நிர்வாகம் செயல்பட கூடாது, திருக்கோயில் நிர்வாகம் சட்டபடி தக்கார் / அதிகாரிகள் பொறுப்பில் நடைபெற வேண்டும் என கோரிக்கை வைத்து ஊழல் பட்டியலை சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் எம் எல் ரவி அவர்கள் வெளியிட்டார். மேலும் பாரதிபுரம் குடியிருப்போர் நலசங்க செயலாளர் நேரு பேசுகையில் சமூக வலை தளங்களில் வரும் செய்திகள் பாரதிபுரத்தின் பெயர் பாதிக்கபடுவதை பொறுத்து கொள்ள மாட்டோம், அர்ச்சகர் சுந்தர் மீது எண்ணெற்ற புகார் வருவது வருத்ததிற்கு உரியது எனவும் நீண்டகாலமாக அர்ச்சகராக இருப்பவர் தவறு செய்வதாக கூறுவதும் அது உண்மை என தெரியவந்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளபடும் எனவும் கோயில் நிர்வாகத்தில் ஊழல் நடைபெறுவதாக கூறுகின்றனர். ஆனால் ஏதோ குளறுபடி நடந்துள்ளது. மேலும் எங்கள் பகுதியில் உள்ள கோயில் மற்றும் பாரதிபுரம் பாதிக்கபட்டால் என்னால் சும்மா இருக்க முடியாது என தெரிவித்தார். இதில் மூத்த வழக்கறிஞர் சிவஞான சம்பந்தம், சமூக ஆர்வலர் தனசேகர், நாகரத்தினம் மக்களுக்கான மக்கள் இயக்க நிர்வாகிகள் துளசி, ரியாஸ் அகமது, ஜெயா, சந்தோஷ், குமார், மணிகண்டன், சரவணன், கோபால், திருநாவுக்கரசு, நரேஷ், பாபு, அறிவழகன், தனசேகர், பசுமை பாபு மற்றும் பாரதிபுரம் குடியிருப்போர் நலசங்க நிர்வாகிகள் யோகி நேரு, ராணி உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.






■ திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பில் மாவட்டச் செயலாளர் தேர்வாய் வழக்கறிஞர் பகுஜன் சூர்யா தலைமையில் மான்யவர் கன்சிராம் நினைவு நாளை முன்னிட்டு அவரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மெழுகுவர்த்தி ஏற்றி நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

## ஆற்காட்டில் மகாளய அமாவாசை சிறப்பு வழிபாடு

ராணிப்பேட்டை, அக்.11-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தென்பாளாற்றங்கரையில் புரட்டாசி மாதம் மகாளய அமாவாசை முன்னிட்டு பொதுமக்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதிகாலை முதலே பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று தங்கள் இல்லங்களில் இறந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வழிபட்டனர். அதனைத் தொடர்ந்து பசு மாட்டிற்கு வாழைப்பழம் அகத்திக்கீரை வழங்கி வணங்கி சென்றனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கதிரம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், புறநோயாளிகள் பதிவு செய்யும் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, தொற்றுநோய் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளை மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்,இ.ஆ.ப., (10.10.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



## பழனியில் தலைக்கவசம் குறித்த விழிப்புணர்வு பேரணியை வரவேற்ற டிஎஸ்பி தேவராஜ். வாகன ஓட்டிகளுக்கு அறிவுரை

திண்டுக்கல், அக்.11-

திண்டுக்கல் மாவட்டம் பழனி பேருந்து நிலையம் அருகே மயில் இரவுண்டானாவில் தலைக்கவசம் குறித்த விழிப்புணர்வு பேரணி நிறைவு பெற்றன.

தொடர்ந்து தமிழகத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் வாகன விபத்துக்களால் இறக்கும் நபர்களின் எண்ணிக்கை அதிகமாகி வரும் நிலையில்

பொதுமக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் தலைக்கவசம் பற்றிய போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் திண்டுக்கல் அஞ்சலி இரவுண்டானாவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் விழிப்புணர்வு பேரணியை கொடியைசைத்து தொடங்கி வைத்தார். தொடர்ந்து புறப்பட்ட விழிப்புணர்வு பேரணி திண்டுக்கல் நகர் வழியாக வலம் வந்து ஒட்டன்சத்திரம் நகரில் பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வலம் வந்தன.

இதனைத் தொடர்ந்து ஒட்டன்சத்திரத்தில் இருந்து புறப்பட்ட வாகன பேரணி பழனி நகர் பேருந்து நிலையம் அருகே வந்தடைந்தன.

நகர காவல் துணை கண்காணிப்பாளர் தேவராஜ் நகர காவல் ஆய்வாளர் தங்க முனுசாமி அனைவரையும் வரவேற்று பொதுமக்களையும் வாகன ஓட்டிகளையும் அழைத்து வந்து தலைக்கவசம் அணிவதன் பயன்கள் பற்றியும் வாகனம் இயக்கும்போது பின்பற்றப்பட வே ண்டிய விதிமுறைகள் பற்றியும் தொடர்ந்து பல்வேறு விழிப்புணர்வு கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

மேலும் காவல் துணை கண்காணிப்பாளர் தேவராஜ் வாகன விபத்தால் ஏற்படும் இறப்புகள் பற்றியும் அதை குறைப்பதற்கான வழிமுறைகள் ப ற்றியும் பல்வேறு கருத்துக்களை எடுத்து கூறினார்.

இந்தப் பேரணியில் திண்டு க்கல் நகர் போக்கு வரத்து காவல் ஆய்வாளர் வள்ளியம்மாள் வழி நடத்தி சென்றார்.

தொடர்ந்து நகர காவலர்கள் மற்றும் ஊர் காவல் படையினர் தலைக்கவசம் அணிந்து கொண்டு இருசக்கர வாகனத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திண்டுக்கல் முதல் பழனி வரை ஊர்வலமாக வந்தடைந்தனர்..

## குன்னூர் அருகே மேல்பாரதி நகரில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பிறந்தநாள் விழா

நீலகிரி, அக்.11-

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸின் 59 -வது பிறந்தநாள் மாநில முழுவதும் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள்கோல காலமாக கொண்டாடினர். இந்நிலையில் நீலகிரி மாவட்ட பாமக மற்றும் எம் சி பி பிரதர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் ஆகியவற்றின் சார்பில் நேற்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு குன்னூர் அருகே உள்ள மேல் பாரதி நகர் பகுதியில் உள்ள சமுதாயக் கூடத்தில் சமையலறை மற்றும் இப்பகுதி இளைஞர்கள் பயன்பெறும் வகையில் உடற்பயிற்சி கூடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் உலிக்கல் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரமேஷ் வரவேற்றுப் பேசினார். பாமக மாநில சிறுபான்மை பிரிவு செயலாளர் ஷேக் மைதீன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசுகையில்:- பாமக தலைவர் அன்பு மணியின் 59-வது பிறந்தநாள் விழா மாநிலம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதில் எக் காரணத்தைக் கொண்டும் விளம்பர பேனர்கள் தேவையில்லாத விளம் பரங்களை தவிர்த்து மக்களுக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும் என தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். அதன் அடிப்படையில் குன்னூர் பகுதியில் உள்ள மேல் பாரதி நகர் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் சமுதாயக் கூட்டத்திற்கு சமையலறை மற்றும் இளைஞர்கள் நலன் கருதி விளையாட்டு பயிற்சி கூடம் ஆகியவற்றுக்கான கட்டுமான துவக்க பணிக்கு நாங்கள் பங்கேற்றது. பெருமையாக உள்ளது. இந்த கட்டுமான பணிகள் நிறைவடைந்த உடன் இந்த கட்டிடங்களை திறக்கும் நிகழ்ச்சியில் எம் எல் ஏ சௌமியா அன்புமணி பங்கேற்பார். இது போன்ற பல்வேறு நற்பணிகளை நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருவது மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.இதில் குறிப்பாக பின் தங்கிய மக்கள் வசிக்கும் மேல் பாரதி நகரில் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் நலன் கருதி பாமக குன்னூர் சட்டமன்ற தொகுதி அமைப்பாளர் அம்பிகாபதி தலைவர் பிறந்தநாளில் துவக்கி உள்ளது வரவேற்கத்தக்கது என பேசினார். இதில் மாவட்ட தலைவர் அம்சா, முன்னாள் மாவட்ட செயலாளர் ஜான் லியோ,நிர்வாகிகள் பஷீர் மற்றும் நசீர், பேசினர். விழாவிற்கு முன்னிலை வைத்த ஊர் தலைவர் செல்லையா வரவேற்று பேசினார். மேல் பாரதி நகர் பாரதி இளைஞர் நற்பணி மன்ற தலைவர் ஒளியழகன், கோடீஸ்வரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். இதனை தொடர்ந்து மேல் பாரதி நகர் மற்றும் சேலாஸ் பகுதியில் மாபெரும் அன்னதான நிகழ்ச்சியும் நடைபெற்றது இதற்கான ஏற்பாடுகளை நீலகிரி மாவட்ட பாமக மற்றும் எம் சி பி பிரதர்ஸ் கன்ஸ்ட்ரக்சன் பங்குதாரரும்,பாமக குன்னூர் சட்டமன்ற தொகுதி அமைப்பாளருமான அம்பிகாபதி ஆகியோர் செய்திருந்தனர். இதை தொடர்ந்து மேல் பாரதி நகர் மற்றும் சேலாஸ் பகுதியில் அன்னதானம் நடைபெற்றது.நிகழ்ச்சியின் முடிவில் பாரதி நற்பணி மன்ற நிர்வாகி நல்லேந்திரன் நன்றி கூறினார்.





■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கதிரம்பட்டி குடியிருப்புப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் முதலமைச்சர் கோப்பை 2026: வெற்றி பெற்ற 87 மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கல்!

**சட்டமன்ற உறுப்பினர் பா. முகுந்தன் பங்கேற்று பதக்கங்கள், சான்றிதழ்களை வழங்கினார் மாநிலப் போட்டிக்குத் தேர்வான இரு மாணவிகள்**



கிருஷ்ணகிரி, அக்.11-

கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் மாவட்ட அளவில் நடைபெற்ற "முதலமைச்சர் கோப்பை 2026" விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் பா. முகுந்தன், வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார்.

இவ்விழாவிற்குக் கல்லூரியின் பொறுப்பு முதல்வர் முனைவர் சாந்தி தலைமை தாங்கினார். முன்னதாக, ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியரும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியருமான முனைவர் கல்பனா வரவேற்புரையாற்றினார்.

**340 மாணவிகள் பங்கேற்பு 87 பேருக்குப் பரிசு!**

மாவட்ட அளவில் நடைபெற்ற முதலமை ச்சர் கோப்பை விளையா ட்டுப் போட்டிகளில் இக்கல்லூரியைச் சேர்ந்த மொத்தம் 340 மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இவர்களில் 87 மாணவிகள் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளை வென்று சாதனை படைத்தனர். வெற்றி பெற்ற மாணவிகளுக்காக மொத்தம் ரூ.1,47,000 பரிசுத்தொகை வழங்கப்பட்டது. மேலும், இக்கல்லூரியைச் சேர்ந்த மாணவி நந்தினி ஓட்டப்பந்தயத்திலும், மாணவி சு.வி. தக்ஷா குண்டு எறிதல் போட்டியிலும் சிறப்பாகச் செயல்பட்டு மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களைக் கல்லூரி நிர்வாகத்தினர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.

பெண்கள் வீர மங்கைகளாக உருவாக வேண்டும் பா. முகுந்தன் பரிசளிப்பு விழாவில் சிறப்புரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் பா. முகுந்தன், வீரமங்கை வேலுநாச்சியாரின் வீரத்தையும் துணிச்சலையும் எடுத்துரைத்தார். அத்தகைய வீரமும் தன்னம்பிக்கையும் கொண்ட பெண்களாக இன்றைய மாணவிகள் உருவாக வேண்டும் என்று வலியுறுத்தினார். மாணவப் பருவத்தில் நல்ல நண்பர்களைப் பெற்றிட வேண்டும் என்றும், கல்வியுடன் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். ஒவ்வொரு மாணவியும் தனக்கென ஓர் இலக்கை நிர்ணயித்து, விடாமுயற்சியுடன் செயல்பட்டு வாழ்க்கையில் சாதனை மங்கைகளாக உயர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நன்றியுரையுடன் நிறைவு இந்நிகழ்ச்சியின் இறுதியாக, கல்லூரிப் பேரவையின் போதைப்பொருள் தடுப்புச் செயலரான மாணவி அஜிதா நன்றியுரையாற்றினார். இவ்விழாவில் அனைத்துத் துறைத் தலைவர்கள், அனைத்துத் துறைகளின் கௌரவ விரிவுரையாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர். மாணவிகளின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதுடன், மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பையும் உருவாக்கியுள்ள இந்நிகழ்வு, கல்லூரி மாணவிகளிடையே விளையாட்டு ஆர்வத்தையும் தன்னம்பிக்கையையும் மேம்படுத்தும் வகையில் அமைந்தது.



# சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருப்பத்தூர், அக்.11-

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு (SJHR) சார்பில், சிறப்பு உதவி ஆய்வாளர் ரூபி தலைமையில் திருப்பத்தூர் தனியார் மாணவிகள் விடுதி மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகளும் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சியில், போக்சோ (POCSO) சட்டம், காவலர் உதவி (Kavalan Udhavi) செயலியின் பயன்பாடு, சாலை பாதுகாப்பு விதிகள், பாதுகாப்பான வாகன ஓட்டம், தலைக்கவசம் அணிவதன் அவசியம் மற்றும் போக்குவரத்து விதிகளை கடைபிடிப்பதின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

# கச்சத்தீவு குறித்த உச்ச நீதிமன்ற கருத்து: இலங்கை அமைச்சர் வரவேற்பு



ராமேசுவரம், அக்.11-

கச்சத்தீவு தொடர்பாக இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்தை இலங்கை மீன்வளத் துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் வரவேற்றுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: இலங்கை கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதை தவிர்க்குமாறு தமிழக மீனவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்து வரவேற்கத்தக்கது. இலங்கை கடல் பரப்புக்குள் அத்துமீறி நுழையும் தமிழக மீன்பிடி படகுகளின் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளால் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. கடல் வளங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. சர்வதேச கடல் எல்லையை மதிப்பதும், கடல் வளங்கள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதார உரிமைகளை பாதுகாப்பதும் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்கு அவசியமானதாகும்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதுடன் கடல் வளங்களையும் பாதுகாக்கும் வகையில், இரு நாடுகளின் மீனவர்களிடையே பேச்சுவார்த்தையின் மூலம், நீடித்த தீர்வுகளை நோக்கி முன்னேறுவது முக்கியமானது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# ஊத்துக்கோட்டையில் ரூ.17.30 லட்சத்தில் புதிய வகுப்பறை கட்டிடம் திறப்பு: மாணவர்கள், பெற்றோர்கள் மகிழ்ச்சி!

திருவள்ளூர், அக்.11-

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணவர்களின் வசதிக்காக ரூ.17.30 லட்சம் மதிப்பில் கட்டபட்ட புதிய வகுப்பறை கட்டிடம் இன்று கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. 2024 2025 ஆம் நிதியாண்டிற்கான நபார்டு (NABARD) வங்கி நிதி உதவித் திட்டத்தின் கீழ் இந்த நவீன வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. கட்டடப் பணிகள் அனைத்தும் முழுமையாக நிறைவடைந்த நிலையில், இன்று முறைப்படி திறப்பு விழா நடைபெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியை A. நிர்மலா அவர்கள் முன்னிலை வகிக்க, மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன (DIE) அலுவலர் N. பிரேம்குமார் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர் (BEO) M. சுப்புலட்சுமி ஆகியோர் தலைமை தாங்கி, குத்துவிளக்கேற்றி புதிய கட்டிடத்தை அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் பள்ளி உதவி ஆசிரியைகள் து.இந்திரா, அ.ரஜினிபிரியதர்ஷினி, கு.யுவராணி,, ப.வளர்மதி, பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர் ப.கீதாஞ்சலி மற்றும் பெருந்திரளான பெற்றோர்கள் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். புதிய வகுப்பறை கட்டிடம் பயன்பாட்டுக்கு வந்துள்ளதால், மாணவர்களின் கற்றல் தரம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மேலும் சிறப்பாக மேம்படும் எனப் பள்ளி நிர்வாகமும் பெற்றோர்களும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.



# மஹாளய அமாவாசையை முன்னிட்டு காவிரி ஆற்றில் பக்தர்கள் புனித நீராடினர் - முன்னோர்களுக்கு திதி கொடுத்து தர்பணம் செய்து வழிபாடு...

முசிறி, அக்.11-

திருச்சி மாவட்டம், முசிறி, தொட்டியம் பகுதியில் உள்ள காவிரி ஆற்றில் பொதுமக்கள் புனித நீராடி தங்கள் முன்னோர்களுக்கு திதி கொடுத்து தர்ப்பணம் செய்து வழிபட்டனர். தை அமாவாசை, ஆடி அமாவாசை, புரட்டாசி மாதத்தில் வரும் மஹாளய அமாவாசை ஆகிய தினங்களில் இந்துக்கள் தங்களது முன்னோர்களுக்கு திதி கொடுத்து தர்ப்பணம் செய்து வழிபடுவது வழக்கம். இந்தநிலையில் இன்று புரட்டாசி மாத மஹாளய அமாவாசை என்பதால் முசிறி காவிரி ஆற்றில் அதிகாலை முதலே பக்தர்கள் புனித நீராடினர்.

அதனைத் தொடர்ந்து வேத விற்பனர்கள் மூலம் இறந்து போன தங்கள் முன்னோர்களுக்கு வாழை இலையில் காய்கறிகள், பச்சரிசி, வாழைப்பழம், மளிகை பொருட்கள், கீரை வகைகள் ஆகியவற்றை படையல் இட்டு வழிபாடு செய்து, திதி கொடுத்து, பிண்டம் வைத்து, தர்ப்பணம் செய்து வழிபட்டனர்.

இவ்வாறு செய்வதால் இறந்து போன தங்களது முன்னோர்கள் தங்களுக்கு துணையாக இருந்து ஆசீர்வதிப்பார்கள் என்ற நம்பிக்கை நிலவுகிறது. காவிரி ஆற்றில் தண்ணீர் செல்வதால் ஏராளமான பக்தர்கள் புனித நீராடி திதி கொடுத்து வழிபாடு நடத்தினர்.

# புரட்டாசி 4-வது சனிக்கிழமை எதிரொலி: திருமலையில் பக்தர்கள் அதிகரிப்பு

திருமலை, அக்.11-

திருப்பதி ஏழுமலையானை இந்த புரட்டாசி 4-வது சனிக்கிழமையன்று தரிசிக்க, திருமலையில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்துள்ளது. இதனால், தர்ம தரிசனம் செய்ய நேற்று 8 முதல் 10 மணி நேரம் ஆனது. இந்த புரட்டாசி மாதத்தில் தமிழகம், புதுவை, கர்நாடகா, தெலங்கானா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து அதிக அளவில் பக்தர்கள் திருமலைக்கு வருகின்றனர். அதிலும் குறிப்பாக, தமிழக பக்தர்களின் கூட்டம் அதிகமாக உள்ளது. பலர் மஞ்சள் ஆடை உடுத்தி, கோவிந்த மாலை அணிந்து, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் இருந்து திருமலைக்கு நேர்த்திக் கடனாக நடந்து வந்து, விரதத்தைத் திருமலையில் நிறைவு செய்கின்றனர். தற்போது 4-வது சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை வருவதாலும், தசரா விடுமுறை என்பதாலும் திருமலைக்கு பக்தர்களின் வருகை அதிகமாகவே உள்ளது.

# "2 ஆண்டுகளில் அதிமுக நிலைமைதான் திமுகவுக்கும்..." - அமைச்சர் நிர்மல் குமார்

மதுரை, அக்.11-

"அதிமுகவுக்கு இன்று ஏற்பட்ட இதே நிலைமை, இன்றும் 2 ஆண்டுகளில் திமுகவுக்கும் உருவாகும்" என்று மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல் குமார் எச்சரித்துள்ளார்.

அவர் செய்தியாளர்களிடம் இன்று கூறிது: "கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் முன்னாள் முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஆகியோர் பிரதமர் வரும்போது பட்டு வேஷ்டி சட்டை அணிந்து வரவேற்றனர். ஒரு நாளாவது பாஜக பற்றியோ, பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோருக்கு எதிராகவோ ஒரு வார்த்தை கூட பேசியது கிடையாது.

பாஜகவின் மிகப் பெரிய கொத்தடிமையாக 5 ஆண்டுகள் திமுக ஆட்சி நடந்தது. உதயநிதியும் மோடியும் அமித் ஷா பற்றி எங்கேயாவது பேசியிருக்கிறார்களா? ஆனால், எங்கள் தலைவர் விஜய் முதல் மாநாட்டில் முதலிலேயே பாஜக எங்களது கொள்கை எதிரி என்று அறிவித்தவர். கொள்கையில் எப்போதும் சமரசம் கிடையாது என அறிவித்தவர். திமுகவும், அதிமுகவும் பாஜகவின் உதவியுடன் ஆட்சி அமைக்க முயற்சித்தவர்கள். உதயநிதி அரசியல் கத்துக்குட்டி மாதிரி பேசுகிறார். எஸ்ஐஆர் முறையை எதிர்த்து தமிழகம் முழுவதும் எதிர்த்து போராடிய கட்சி தவெக. எஸ்ஐஆரில் தவறு நடந்துள்ளது என எதிர்ப்பு தெரிவித்தவர் விஜய். அனுமதிக்கப்பட்ட இடங்களில் போராடியவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அனுமதிக்காத இடங்களில் போராட்டம் நடத்த காவல் துறை அனுமதி வழங்கவில்லை. எஸ்ஐஆர் நடக்காமல் இருந்திருந்தால் தவெக 120 இடங்களில் வெற்றி பெற்றிருக்கும்.

தாராபுரம் தொகுதி அதிமுக கோட்டை. அதில் அதிமுக மூன்றாம் இடத்துக்கு கொண்டு சென்றவர் எடப்பாடி பழனிசாமி. அவர் திமுகவோடு கூட்டணி அமைத்து ஆட்சி அமைப்பது பிடிக்காமல்தான் தவெகவில் சேர்ந்தனர்.

அதிமுகவின் உண்மையான வாக்காளர்கள் தவெகவின் மீதும், விஜய் மீதும் நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளனர். ஒட்டுமொத்தமாக அதிமுக வாக்குகள் தவெகவுக்கு ஷிஃப்ட் ஆகிவிட்டது. அடுத்து வருகிற எல்லா தேர்தல்களிலும் தவெக வெற்றி பெறும். தாராபுரம் அதிமுக கோட்டையாக இருந்தது. அங்கேயே மூன்றாவது இடத்துக்கு அக்கட்சி சென்றுவிட்டது. இனி எந்த தேர்தலானாலும் அதிமுக 3, 4-வது இடத்துக்கே செல்லும்.

இடைத்தேர்தலுக்கும், பொதுத்தேர்தலுக்கும் வேறுபாடு உள்ளது. இடைத்தேர்தலில் 2 வது இடம் கிடைத்ததே மிகப் பெரிய வெற்றியாக திமுக தலைவர் ஸ்டாலின் எண்ணுகிறார். தற்போது அதிமுகவுக்கு இன்று ஏற்பட்ட இதே நிலைமை 2 ஆண்டுகளில் திமுகவுக்கும் வரும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# மதுரை அப்போலோ மருத்துவமனையில் ரோபோடிக் அறுவை சிகிச்சையில் புதிய மைல்கல்! 100 அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக நிறைவு செய்து சாதனை



மதுரை: அக்.11-

தென் தமிழகத்தில் நவீன மருத்துவச் சேவைகளை மேம்படுத்தும் வகையில், மதுரை அப்போலோ சிறப்பு மருத்துவமனை ரோபோடிக் தொழில்நுட்ப உதவியுடன் 100 அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக நிறைவு செய்து புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.

மதுரை அப்போலோ மருத்துவமனையில் இரைப்பை மற்றும் குடலியல் அறுவை சிகிச்சை, சிறுநீரகவியல், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், புற்றுநோய் அறுவை சிகிச்சை, பொது அறுவை சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ரோபோடிக் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், ரோபோடிக் ஹெர்னியா அறுவை சிகிச்சை (ETEP), விப்பிள் அறுவை சிகிச்சை, ஹெமிகோலெக்டமி, ஹெல்லர் மயோடமி மற்றும் கருப்பை அகற்றும் அறுவை சிகிச்சை (ஹிஸ்டரெக்டமி) உள்ளிட்ட சிக்கலான அறுவை சிகிச்சைகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனுபவம் வாய்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்கள், நவீன மருத்துவத் தொழில்நுட்பம் மற்றும் ஒருங்கிணைந்த நோயாளிப் பராமரிப்பு ஆகியவற்றின் மூலம் இந்தச் சாதனை எட்டப்பட்டுள்ளது. ரோபோடிக் தொழில்நுட்பம் அறுவை சிகிச்சைகளில் துல்லியத்தை மேம்படுத்தவும், நோயாளிகளுக்கான சிகிச்சை முறைகளை மேலும் நவீனப்படுத்தவும் உதவுகிறது.

பொதுமக்களுக்கான சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்தவும், உயர்தர சிறப்பு மருத்துவச் சிகிச்சைகள் அனைவருக்கும் எளிதில் கிடைப்பதை உறுதி செய்யவும் நவீன மருத்துவத் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வது அவசியம் எனக் குறிப்பிட்டார். தென் தமிழக மக்களுக்கு அதிநவீன அறுவை சிகிச்சை வசதிகளைக் கொண்டு சேர்ப்பதில் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியது என்றும் தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்பில் டாக்டர் ராகவி நடராஜன், மகப்பேறு மற்றும் பெண்கள் சிறுநீரக நல மருத்துவ நிபுணர்

டாக்டர் கே.பாலு மகேந்திரா, புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர்

டாக்டர் கே.ஹேமலேகா, மூத்த மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர்

டாக்டர் ஜே.மதுசூதனன், அறுவை சிகிச்சை இரைப்பை-குடல் மருத்துவ நிபுணர்

டாக்டர் சீனிவாசன் ராமச்சந்திரன், அறுவை சிகிச்சை இரைப்பை-குடல் மருத்துவ நிபுணர்

டாக்டர் ஆர்.விஷ்ணு ராஜா, சிறுநீரகவியல் மற்றும் ஆண்மையியல் சிகிச்சை நிபுணர்

டாக்டர் நிகில் திவாரி, தலைமை நிர்வாக அதிகாரி, அப்பல்லோ மருத்துவமனைகள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.







# இளையான்குடி நீதிமன்றத்தில் உலக மனநல தின சட்ட விழிப்புணர்வு முகாம்

இளையான்குடி, அக்.11-

தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் செயல் திட்டத்தின்படியும், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின்படியும் சிவகங்கை மாவட்டம் இளையான்குடி நீதிமன்ற வளாகத்தில் உலக மனநல தின விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இளையான்குடி வட்ட சட்டப்பணிகள் குழு தலைவரும், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதியுமான மணிவர்மன் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது, மனநலம் குன்றியோருக்கான உரிமைகள் குறித்த பதாகையைத் திறந்து வைத்து, மனநலப் பிரச்சனையுடைய நபர்களின் உரிமைகள் மற்றும் சட்டப் பாதுகாப்பு குறித்த துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார். இதனைத் தொடர்ந்து, இளையான்குடி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பயின்று வரும் மனநலம் குன்றிய குழந்தைகளுக்கு நோட்டு, பேனா மற்றும் பென்சில்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில், பள்ளி மாணவிகளிடையே மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களின் உரிமைகள், சட்டப் பாதுகாப்பு, சட்ட உதவி மற்றும் அவர்களைப் புரிந்து கொண்டு நாம் எவ்வாறு உதவ வேண்டும் என்பது குறித்து நீதிபதி மணிவர்மன் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் வழக்கறிஞர்கள் சிவக்குமார், முத்துச்சாமி, குமார், காளியம்மாள், பாண்டியன், மாரிமுத்து, ஹரிஹரன், பிரபு, ரகுபதி மற்றும் பள்ளி ஆசிரிய, ஆசிரியைகள் பலர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை சட்டப்பணிகள் குழு இளவரசன் செய்திருந்தார்.

# ஸ்மார்ட் மீட்டர் டெண்டர் அறிவிப்பைத் திரும்பப் பெறக் கோரி சிவகங்கையில் மின்வாரியத் தொழிற்சங்கத்தினர் கண்டன ஆர்ப்பாட்டம்!

## தமிழக மக்களைப் பாதிக்கும் திட்டம் எனக் குற்றச்சாட்டு

## மின்வாரிய அலுவலகம் முன்பு தொழிலாளர்கள் போராட்டம்!

சிவகங்கை, அக்.11-

சிவகங்கையில் தமிழக மக்களைப் பாதிக்கும் எனக் கூறப்படும் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்திற்கான டெண்டர் அறிவிப்பைத் திரும்பப் பெற வலியுறுத்தி தமிழ்நாடு எலெக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் ஃபெடரேஷன் (Tamil Nadu Electricity Board Employees Federation) தொழிற்சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிவகங்கை மின்வாரிய அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திட்டத் தலைவர் சாத்தையா தலைமை தாங்கினார்.





ஸ்மார்ட் மீட்டர் திட்டத்திற்கு எதிர்ப்பு! ஆர்ப்பாட்டத்தில் திட்டச் செயலாளர் கே.ஆர்.கே. சுப்பிரமணியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது, ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்படுவதால் பொதுமக்களுக்கும் மின்நுகர்வோருக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து விளக்கிப் பேசினார். மேலும், தமிழக மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதற்கான டெண்டர் அறிவிப்பை அரசு திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தினார். தொழிற்சங்க நிர்வாகிகள் பங்கேற்பு! இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், திட்டப் பொருளாளர் ஆனந்த செல்வம் செயல் தலைவர் காளிமுத்தன் துணைத் தலைவர் பூமிநாதன் அமைப்புச் செயலாளர் காஜா முஹைதீன் உள்ளிட்ட தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் ஸ்மார்ட் மீட்டர் டெண்டர் அறிவிப்பைத் திரும்பப் பெற வலியுறுத்தி கண்டன முழக்கங்களை எழுப்பினர். மின்நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தொழிற்சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.






■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, 2.0 (Electoral Literacy Club - 2.0) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் ஓசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா,மாவட்ட வழங்கல் அலுவலர் கீதாராணி, உதவி ஆணையர் (ஆயம்) பழனி மற்றும் வட்டாட்சியர்கள், வாக்காளர்கள் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், கல்லூரி தேர்தல் எழுத்தறிவு மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளனர்.

# வெலிங்டன் ராணுவ கல்லூரி பயிற்சி மைதானத்தில் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ மாணவிகளுக்கான விளையாட்டு போட்டிகளை டெப்டி கமாண்டன்ட் கர்னல் பிரதீப்குமார் துவக்கி வைத்தார்

நீலகிரி, அக்.11-

குன்னூர் வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரி மைதானத்தில் மாவட்ட அளவிலான அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கான, விளையாட்டுப் போட்டிகளை ராணுவ பயிற்சி மையத்தின் டெப்டி கமாண்டன்ட் கர்னல் பிரதீப் குமார் துவக்கி வைத்தார். நிறைவு விழாவில் இராணுவ பயிற்சி மையத்தின் கமாண்டர் பிரிகேடியர் கிறிஸ் நேந்து தாஸ் அவர்கள் சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகளை வழங்கினார்

இந்திய கால்பந்து வரலாற்றின் மிக சிறந்த கோல்கிப்பராக கருதப்படும் பீட்டர் தங்கராஜ் குன்னூர் அருகே உள்ள வெலிங்டன் மெட்ராஸ் ரெஜிமெண்டல் சென்ட்டர் படை பிரிவில் ஹவில்தாராக பணியாற்றிய இவர்,இந்திய ராணுவத்தின் மூலம் தனது விளையாட்டு வாழ்க்கையை துவக்கினார். அவரது நினைவை போற்றும் வகையில் நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் பகுதியில ராணுவ பயிற்சி கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு தங்கராஜ் ஸ்டேடியம் என பெயரிடப்பட்டுள்ளது.






இந்தநிலையில் பீட்டர் தங்கராஜ் நினைவு நாளை முன்னிட்டு வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரி தங்கராஜ் ஸ்டேடியத்தில் மாவட்ட அளவிலான அரசு பள்ளி மாணவிகள் மற்றும் மாணவர்களிடையே,விளையாட்டுபோட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளை முதலில் ராணுவ பயிற்சி மய்யத்தின் டெப்டி கமான்டன்ட் கர்னல் பிரதீப் குமார் துவக்கி வைத்தார்.இதில் மாவட்டத்தில் உள்ள 18 அரசு பள்ளிகளை சேர்ந்த 350க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். 10 வயது முதல் 19 வயதுக்குட்பட்ட பள்ளி மாணவ, மாணவிகளுக்கிடையே,100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர் ஓட்டபந்தயங்களும்,குண்டு எறிதல்,ஈட்டி எறிதல்,நீளம் தாண்டுதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. இந்த போட்டிகளில் மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு இராணுவ பயிற்சி மைய்யத்தின் கமான்டன்ட் பிரிகேடியர் கிறிஸ் நேந்து தாஸ்,அவர்கள் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார். இதில் ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை வெலிங்டன் கண்டோன்மென்ட், பள்ளி வென்றது, மேலும் ஆண்கள் பள்ளியில் அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி, பெண்கள் பிரிவில் புனித அன்னாள் மேல் நிலைப்பள்ளி (ஹேொண்ஸ் கான்வென்ட்) வெற்றி பெற்றது இவர்களுக்கு வெலிங்டன் ராணுவ பயிற்சி மையத்தின் பிரிகேடியர் கிறிஸ் நேந்து தாஸ் சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் வழங்கினார்.

## தேனி மாவட்ட ஆட்சித்தலைவராக வ. சிவகிருஷ்ணமூர்த்தி, பொறுப்பேற்றுக் கொண்டார்



தேனி அக்.11-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேனி மாவட்டத்தின் புதிய ஆட்சித்தலைவராக .வ . சிவகிருஷ்ணமூர்த்தி, பொறுப்பேற்றுக் கொண்டார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தை பூர்வீகமாக கொண்டு, தற்பொழுது சென்னையில் வசித்துவரும் வ.சிவகிருஷ்ணமூர்த்தி, ., பி.டெக் (B.Tech) பட்டம் பயின்று, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2017 ம் ஆண்டு நடத்தப்பட்ட அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வில் (UPSC) தேர்ச்சி பெற்று, விழுப்புரம் மாவட்டத்தில் உதவி ஆட்சியர் (பயிற்சி)-ஆகவும், திருநெல்வேலி மாவட்டத்தில் சேரன்மாதேவி சார் ஆட்சியராகவும், திருநெல்வேலி மற்றும் ஈரோடு மாநகராட்சி ஆணையராகவும், சென்னை மாநகராட்சி துணை ஆணையராகவும், அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இணை நிர்வாக இயக்குநகராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தேனி மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக .வ.சிவகிருஷ்ணமூர்த்தி, பொறுப்பேற்றுக் கொண்டு, செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், தேனி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவராக பணி வழங்கியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு, சிறப்புமிக்க தேனி மாவட்டத்தில் பணியாற்றுவதில் மிகுந்த பெருமை கொள்கிறேன். இம்மாவட்டத்தில் பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகள் போதுமான அளவு கிடைத்திடும் வகையில் பணியாற்றுவேன். மேலும் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி உரிய தீர்வு வழங்கிட பணி மேற்கொள்வேன் என மாவட்ட ஆட்சித்தலைவர். வ.சிவகிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் வெற்றி: "மக்களின் சக்தியே மகத்தான சக்தி!"

## தவெக ராமநாதபுரம் மண்டல இணை ஒருங்கிணைப்பாளர் ER.A. ஜனார்த்தனன் நன்றி அறிக்கை!

ராமநாதபுரம், அக்.11-

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்களில் தமிழக வெற்றிக் கழகம் பெற்ற வெற்றி, மக்களின் சக்தியை மீண்டும் நிரூபித்துள்ளதாக தவெக தகவல் தொழில்நுட்ப அணியின் ராமநாதபுரம் மண்டல இணை ஒருங்கிணைப்பாளர் ER.A. ஜனார்த்தனன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள நன்றி அறிக்கையில் கூறியிருப்பதாவது: "ஜனநாயகத்தின் முன் பணநாயகம் எடுபடாது!" மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் தலைமையில் கழகம் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்துள்ளது. "மக்களின் சக்தியே மகத்தான சக்தி. ஜனநாயகத்தின் முன்னால் பணநாயகமும் சதிகளும் எடுபடாது" என்பதைத் தமிழக மக்கள் மீண்டும் நிரூபித்துள்ளனர். மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ள மதுராந்தகம் தொகுதி வேட்பாளர் கே. மரகதம் குமரவேல், தாராபுரம் தொகுதி வேட்பாளர் பி. சத்தியபாமா ஆகியோருக்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். விஜய், ஆனந்த் உள்ளிட்ட தலைவர்களுக்கு நன்றி! தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் களப்பணி மேற்கொள்ள வாய்ப்பளித்த தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தேர்தல் பணிகளில் வழிநடத்திய கழகப் பொதுச்செயலாளர் என்.



ஆனந்த், டாக்டர் டி.கே. பிரபு ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிவகங்கை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். முத்து பாரதி, சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் ஏ. குழந்தை ராணி நாச்சியார், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் டி. இளங்கோவன் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொண்ட ர்களுக்கும் வாக்காளர்க ளுக்கும் நன்றி! இரண்டு இடைத்தேர்தல்களிலும் இரவு பகலாக உழைத்த கூட்டணிக் கட்சித் தலை வர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் வாக்காளர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களின் நம்பிக்கை யார் பக்கம் உள்ளது என்பதை இந்த இடைத்தேர்தல் முடிவுகள் வெளிப்ப டுத்தியுள்ளதாகக் கருதுகிறேன். "மக்கள் சக்தி வென்றது. மக்களின் நம்பிக்கையே எங்களது வெற்றிக்கு அடித்தளம்" என ER.A. ஜனார்த்தனன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# பர்கூர் அருகே பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் கூட்டம்! தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு நுகர்வோர் சங்க மாநில பொதுச் செயலாளர் டாக்டர் சந்திரமோகன் நன்றி

கிருஷ்ணகிரி, அக்.11-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் அவர்களின் உத்தரவின்படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் குறைகளைத் தீர்க்கும் வகையில் பல்வேறு இடங்களில் மக்கள் குறைதீர் கூட்டங்கள் நடைபெற்றன.

இதன் ஒரு பகுதியாக, பர்கூர் ஒன்றியம் ஜெகதேவி ஊராட்சிக்கு உட்பட்ட பாகிமனூர் கிராமத்தில் பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு குடிமைப் பொருள் வழங்கல் வட்ட வழங்கல் அலுவலர் முருகன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், பெயர் திருத்தம், முகவரி மாற்றம், நியாய விலைக் கடை மாற்றம்




மற்றும் ரேஷன் கடைகள் தொடர்பான குறைகள் குறித்த மனுக்கள் பெறப்பட்டு, அவற்றுக்குத் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் பாகிமனூர் உள்ளிட்ட சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது குடும்ப அட்டை தொடர்பான குறைகளைத் தெரிவித்து பயன்பெற்றனர். இந்நிகழ்ச்சியில் சமூக நுகர்வோர் நலப் பாதுகாப்புச் சங்கத்தின் மாநில செய்தித் தொடர்பாளர் ஜெய்சன், நிர்வாகிகள் சசிகுமார், அருண்பாண்டியன், குடிமைப் பொருள் வழங்கல் தனி ஆய்வாளர் மாதவன், பொறியாளர் விக்னேஷ் மற்றும் நியாய விலைக் கடை விற்பனையாளர் ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், சமூக நுகர்வோர் நலப் பாதுகாப்புச் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளரும், முன்னாள் மாவட்ட பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழு உறுப்பினருமான டாக்டர் சந்திரமோகன் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அப்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் பொதுமக்களின் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்குதல், பெயர் திருத்தம், கடை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்குத் தீர்வு காணும் வகையில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுவது வரவேற்கத்தக்கது என்று தெரிவித்தார். மேலும், பொதுமக்களின் குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்யும் நோக்கில் நடவடிக்கை எடுத்து வரும் தமிழக அரசுக்கும், மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் மாவட்ட நிர்வாகத்தினருக்கும் சமூக நுகர்வோர் நலப் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார். பொதுமக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டறிந்து, குடும்ப அட்டை மற்றும் பொது விநியோகத் திட்டம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் நடைபெற்ற இக்கூட்டம், அப்பகுதி மக்களிடையே வரவேற்பைப் பெற்றது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161